

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் எஸ்.புதூர், ரெட்டாக்குறிச்சி, கொளவாய், களத்தூர், அடரி ஆகிய கிராமங்களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றியக் கழக செயலாளர் அடரி சின்னசாமி மாவட்ட பிரதிநிதி மாங்குளம் வெங்கடேசன், ராமதாஸ், கே. என்.டி.சங்கர் உள்ளனர்.



பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, கடலூர் மாநகர கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘பொருநை அருங்காட்சியகம்’ திறப்பு விழா! இன்று நெல்லை வருகை தரும்

# ‘திராவிட மாடல்’ முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வர – நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் வேண்டுகோள்!

நெல்லை.டிச.20-

நெல்லைக்கு இன்று வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர், கழக தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் இன்று (20.12.2025), 21.12.2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு எல்லோர்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள். இரண்டு நாள் நிகழ்வில் கழக நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.



வேண்டுகோள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை வற்றாத ஜீவ நதி தரணிபாயும் தாமிரபரணி நதிக்கரையின் பழம் பெரும் நாகரிகத்தை உலகறிய செய்திடும் வகையில் உருவாக்கப்பட்டு இருக்கும் ரூபாய் 67.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ”பொருநை” அருங்காட்சியகம் துவக்க விழா உட்பட,ரூபாய் 639 கோடி மதிப்பீட்டிலான, முடிவடைந்த,அரசு திட்டங்களை திறந்து வைப்பதற்கும், புதிய திட்டங்களை தொடங்கி வைப்பதற்கும்,சுமார் 45,000 ம் பேர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கும்,

20.21 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர்,நமது நெஞ்சம் நிறைந்த,மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற கழகத் தலைவர் அவர்களுக்கு இன்று (20.12.2025 சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் கே.டி.சி.நகர் ரவுண்டானா அருகில்,நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பிரம்மாண்டமான உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட இருக்கிறது.

வரலாற்று சிறப்புமிகு இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள்,மாநகர,பகுதி, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், வட்ட,கிளைக் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA.2,) (BDA,) (BLC) உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள்,பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மக்களின் பயன்பாட்டிற்காக தொலைத் தொடர்புச் சேவையை மேம்படுத்துவீர்!

## ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சரிடம் ஆ.மணி எம்.பி. மனு!

புதுடெல்லி, டிச.20-

தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் தாலுகா: ஜிட்டான் அள்ளி,ஐக்க சமுத்திரம் தர்மபுரி தாலுகா, தொப்பூர் கணவாய் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள்,பென்னாகரம் தாலுக்கா: கூக்குட்ட மருதஅள்ளி ஊராட்சி (முதுகாம்பட்டி),பெரும்பாலை ஊராட்சி (சாமத்தல்), தொன்னகுட்டஅள்ளி ( சீலநாயக்கனூர், அஜ்ஜன அள்ளி ஊராட்சி (சின்னப்ப நல்லூர்), அரூர் தாலுக்கா:



வேடகட்டமடுவு ஊராட்சி ( கருங்கல்பாடி) சிட்லிங் ஊராட்சி (வேலனூர்) கீரைபட்டி ஊராட்சி ( வள்ளி மதுரை) ஆகிய இடங்களில் மக்களின் பயன்பாட்டிற்காக தொலை தொடர்பு சேவை இல்லாமல்,பள்ளி கல்லூரி மாணவர்கள் ஆன்லைன் வகுப்புக்கு இன்டர்நெட் சேவை மிகவும் மந்தமாக இருப்பதால் உடனடியாக டவர் இல்லாத இடங்களில் டவர் அமைத்து தரும்படியும்,

இன்டர்நெட் சேவை மிகவும் குறைவாக இருக்கும் இடத்தில் அதை மேம்படுத்தி தருமாறு தர்மபுரி மாவட்டத்து மக்கள் சார்பாக புது டெல்லியில் ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவிடம் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி நேரில் கோரிக்கை மனுவினை அளித்தார்.

### ஒலக்கூர் ஒன்றியம் – பள்ளிப்பாக்கத்தில்

# ரூ. 1.95 கோடி மதிப்பில் தார்ச் சாலை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திண்டிவனம், டிச.20-

ஒலக்கூர் ஒன்றியம் பள்ளிப்பாக்கம் ஊராட்சியில்நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட தார்ச் சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் கிராம சாலைகள் திட்டத்தின் 25 ஆம் ஆண்டு செயலாக்கா விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணிஒலக்கூர் ஒன்றியம்பள்ளிப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்றது.

ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் தலைமையில் துணை சேர்மன்ராஜாராமன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி ஊர்வலத்தை தொடங்கி வைத்தார்.

முன்னதாக பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் நல்லாத்தூர் பள்ளிப்பாக்கம் வழியாக ஏப்பாக்கம் செல்லும் சாலையை 1 கோடியே 95 லட்சத்து 36ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய தார் சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றத்தில் இருந்து ஏழை எளிய மக்களுக்கும் கிராமப்புறத்தில் உள்ள பெண்கள் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் முன்னேறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் மகளிர் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்,புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் கனவு இல்ல திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகஅவர் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அன்பரசு,மாவட்ட கவுன்சிலர் எழிலரசி ஏழுமலை,வட்டார வளர்ச்சி அலுவலர் தேவதாஸ்,ஒன்றிய கவுன்சிலர் ஜனாதனன்,ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா கிருஷ்ணமூர்த்தி,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன்,குப்பன், சண்முகம், திருமால், கன்னியப்பன், விஜயகுமார், அருள் ,ஆறுமுகம், தினகரன், சித்ரா, ஜெயபால், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் பள்ளிப்பாக்கம் ஊராட்சியில்நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்ல் அமைக்கப்பட்ட தார்ச் சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்தார்.உடன் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜா ராமன் ஊரக வளர்ச்சி துறை உதவி செயற்பொறியாளர் அன்பரசு, வட்டார வளர்ச்சி அலுவலர் தேவதாஸ், மாவட்ட கவுன்சிலர் ஏழிலரசி ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர் ஜனார்த்தனன்,உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! மதுரை மாநகர் மாவட்டம்

# செல்லூர் பகுதியில் - மாபெரும் பொது மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. .துவக்கி வைக்கிறார்!

மதுரை,டிச.20-

மதுரை மாநகர் மாவட்டம் செல்லூர் பகுதி திமுக மற்றும் பாலாஜி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனை சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு நாளை (21.12.2025-ஞாயிற்றுக் கிழமை) மாபெரும் பொது மருத்துவ முகாமினை மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்க உள்ளார் அதன் விபரம்

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மாநகர் மாவட்ட திமுக சார்பில் கடந்த 27ஆம் தேதி முதல் நாள் தோறும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்று வருகிறது

அதன் ஒரு பகுதியாக செல்லூர் பகுதி திமுக மற்றும் மதுரை பாலம் ஸ்டேசன் ரோடு பாலாஜி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இணைந்து (21.12.2025-ஞாயிற்றுக் கிழமை) மாபெரும் பொது மருத்துவ முகாம் நடைபெற உள்ளது


மதுரை செல்லூர் அய்யனார் கோவில் தெரு, மனோகரா நடுநிலைப் பள்ளியில் நடைபெறும் இம்முகாமினை காலை 9 மணிக்கு செல்லூர் பகுதி செயலாளர் டி.ஏ.குரும்பன் தலைமையில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல்ஏ துவக்கி வைக்கிறார்

மேலும் இம்முகாமில் தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்து ராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தை வேலு, பொதுக்குழு உறுப்பினர் ரவீந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்றனர்

வட்டச் செயலாளர்கள் கே.பவுன்ராஜ், பி.நல்ல காமன், டி.மாயம் பெருமாள், முரளி கணேஷ் உள்ளிட்டோர் வரவேற்புரை நிகழ்த்துகின்றனர்

இம்முகாமில் மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி செயலாளர்கள், செல்லூர் பகுதி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்க உள்ளனர்

மேலும் இம்முகாம் முடிவில் மு.தமிழ்சந்திரன், செல்லூர் கருப்பு, இந்திரா நகர் பாலு, துபாய் நாகராஜன், கணேசன் உள்ளிட்டோர் நன்றியுரை நிகழ்த்துகின்றனர்



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், குல்தீப்மங்கலம் ஊராட்சியில் உள்ள வாக்கு சாவடி எண்கள் 15 “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குசாவடி” பரப்புரையை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி அகஸ்தியர் ஆனந்தன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஆர்.எஸ்.. பாலமுருகன், கிளை செயலாளர்கள் கிருஷ்ணன், சின்னதுரை, விஸ்வநாதன், ராஜேந்திரன், வாக்குசாவடி முகவர் பன்னீர்செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் நகரம், வழுதரெட்டி, பாண்டியன் நகரில், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய கருமகாரிய கட்டிடத்தை திறந்து வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகர கழக செயலாளர் இரா.சக்கரை, நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மறைந்த பேராசிரியர் அவர்களின் 103வதுபிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், மற்றும் கழக நிர்வாகிகள் வி.ஜி. அன்பு, ஆ.செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் ஏ.சி.தேவகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சையத்அபீப் தங்கல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆந்திரா கே.ஏ.முனுசாமி
### டிசம்பர் 20 (2016)



எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.

ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.

2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.